வாக்குமூலம்
உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்.
வழக்குஎண். CC 675/2020
வழக்குசாட்சி LW3/PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செந்தில்வேல் | ஜாதி | |
| கணவர்/தந்தை | ருத்ரப்பன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 60 |

தேதி 28.01.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டார்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் மாத்தூர் MMDA வில் வசித்து வருகிறேன். கடந்த 2019 தேதி மாதம் ஞாபகமில்லை. நான் ஒரு நாள் வீட்டிலிருந்து வெளியே வந்த போது கூட்டமாக இருந்தது. போலீசார் நின்றுக் கொண்டிருந்தார்கள். என்னிடம் போலீசார் பூட்டு சாவியை கேட்டார்கள். பக்கத்து வீட்டில் திருடு போனதற்காக விசாரிக்க வந்தார்கள். சாவியை என்னிடம் கொடுத்துவிட்டுச் சென்றார்கள். போலீசார் பின்னர் அங்கு வந்து படம் வரைந்தார்கள். என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் போட்டுக் கொடுத்தேன். பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அது அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணைச் செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

புகார்தாரர் ஊரில் இருந்து வந்த பின்பு போலீசார் படம் வரைந்தார்களா என்றால் இல்லை. அவர்கள் வருவதற்கு முன்பே

வரைந்துவிட்டார்கள். போலீசார் வேறு தேதியில் வரைந்தார்களா என்றால் ஞாபகம் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**